# மதநிலையங்கள் மடமையை வளர்ப்பதா?

Regd: No. M. 5458 Phone No. 4502:
விலை அரை அணா இலங்கை 5 சதம்

# மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்திதழ்)

மாலை 2 | சென்னை 21—12—50 | மணி 19

## அறநிலையப் பாதுகாப்பு அரசியல் சூழ்ச்சியாதல்கூடாது

(o)

## 30,000 மதநிலையங்கள் கண்காணிப்புக்குட்படவேண்டும்

(o)

## இலட்சம் ஆட்கள் தேர்தல் பிரசாரகர்களாகிவிடக்கூடாது

சென்னை, டிச. 20—

நம் நாட்டில் 30,000-க்கு மேற்பட்ட பெரிய மதநிலையங்கள்-மடங்கள், கோயில்கள் முதலியவை இருக்கின்றன. இவை இது காறும் தான்தோன்றிகளாக இருந்து மனம்போன போக்கில் நடத்தப்பட்டு வந்தன.

வடகலை பெரிதா, தென்கலை பெரிதா என்னும் சண்டை நீதி மன்றமேறும் ஆண்டுக் கணக்கில் வழக்கு நடைபெறும். கோயில் பணம் தண்ணீராகச் செலவழியும்.

முதலில் தீர்த்தம் பெறும் உரிமை எவருக்கு என்பது பற்றிய வழக்கு நீதிமன்றமேறும், பணம் தண்ணீராகும்.

மதத்தின் பேரால், கடவுளின் பேரால், விழாக்கள் பேரால் நடைபெறும் ஒழுக்க ஈனங்கள் கணக்கிலடங்கா. மடாதிபதிகள் சர்வாதிகாரிகளாக விளங்குவதும் அதனால் நேரும் ஒழுக்கக் கேடுகளும் அவை நீதிமன்றமேறுவதும், உண்மையில் மதமும், கடவுளும், மடாதிகளும் நம் நாட்டில் கேலிக்கூத்தாகி விட்டன.

நம்நாட்டு மக்களின் மனத்தில் குருட்டுப்பக்தி, அறியாமை நிறைந்துள்ள மதவெறி, வீண் வேதாந்தம் கவைக்குதவாத கடவுள் கதைகள் முதலியவை ஆழப்பதியவைக்கப் பட்டுவிட்டபடியால், இங்கே கடவுள் கூட்டமும், கோயில் பெருக்கமும், மடங்கள் பெருக்கமும், மக்கள் இவற்றிற்கு அடிமையாதலும் அதனால் கோயில்கள், மடங்களின் நிர்வாகிகளாக காவலர்கள் ஊழல்களிலும் ஒழுக்கக்கேடுகளிலும் இறங்குவதும் வழக்கமாகிவிட்டது.

இவற்றை ஒழிக்கவேண்டுமென்றால் அரசாங்கம் சட்டம் செய்தாகவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதனை யெண்ணியே காலஞ்சென்ற பெரியார் பனகல் அரசர் அறநிலையங்களைக் கண்காணிப்பில் கொணரவேண்டி, அறநிலையப் பாதுகாப்புச் சட்டம் கொண்டுவந்தார். மேலும் அவற்றை ஒழுங்குபடுத்த இப்போதைய சட்டம் சென்னைச் சட்டசபையில் பல்லாண்டுகளுக்குப் பிறகு நிறைவேறியது.

இந்தச் சட்டமும் மதத்தின் பேரால் நடைபெறும் ஆபாசங்களை அடியோடு அகற்றக்கூடியதாக இல்லை. ஆனால், வெறும் வாயை மெல்வதைவிட அவலைமெல்வது மேலென்னும் நிலையிலிருப்பது இந்தச் சட்டம்.

நாட்டிலே, குறிப்பிட்ட ஓர் அளவு மக்களுக்கு ஒரு கோயில் இருந்தால் போதுமான வரையறுத்து ஏராளமான கோயில்கள் மக்கள் வாழுமிடத்தை வீணில் அடைத்துக்கொண்டிராதபடி செய்திருக்கலாம். கோயில்களில் இவ்விவ்வாறு தான் நடைமுறைகள் இருக்கவேண்டும் என்று வரையறுத்திருக்கலாம், இவை கவனிக்கப்படவில்லை.

அர்ச்சகர் பதவிக்கு ஆறு மாதப் பாடத் திட்டம் வைத்து, அதில் படித்துத் தேர்ச்சி பெற்றவரே அர்ச்சராகலாம் என்றும், அப்பரீட்சைக்கு இந்துக்களாயுள்ள எக்குலத்தவரும் படிக்கலாம் என்றும், அர்ச்சகராக எவருக்கும்தடையில்லையென்றும் சட்டம் செய்திருக்கவேண்டும். அது கவனிக்கப் படவில்லை. இவ்வாறு எத்தனையோ நல்ல திட்டங்கள் கவனிக்கப்படாமல் மத நிலையங்களின் நிர்வாகத்தை மேற்பார்வையிடும் உரிமையை அரசாங்கம் பெறுவதற்குத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

ஆனால் ஸ்ரீரங்கநாதப்பெருமாளின் ஆணையின் மீதே இச்சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதாக அமைச்சர் சமாதானம் கூறிய போது, நம் சென்னைப் பார்லிமெண்டில் வீற்றிருக்கும் அங்கத்தினர்களின் பரிதாப நிலைமை நம் மனக்கண் முன் தோன்றுகிறது.

சட்டம் நிறைவேறிவிட்டது; மேல் சபையின் அங்கீகாரத்துக்குப் போகிறது. இந்தச் சட்டத்தின் பயனாக 30,000 மத நிலையங்கள் அரசாங்கத்தின்கண்காணிப்புக்குள் அடங்கும். இவற்றை நிர்வாகம் செய்ய, ஓரிலட்சம் ஆட்கள் தர்மகர்த்தர்களாகவும், பிற ஊழியர்களாகவும் நியமிக்கப்படவேண்டியவர்களாயுள்ளனர் இந்தப்பொறுப்பு

(3-ம் பக்கம் பார்க்க)

## நிதிமந்திரியின் முகாரி

—o—

## மத்ய சர்க்கார் அதிகாரம் வளருகிறது

—o—

### ஐந்தாறு கோடி இழக்க நேரிடும்

— கோபால் ரெட்டி.

சென்னை, டிச. 19—

இன்று கூடிய சென்னை சட்ட சபையில் நிதி மந்திரி கோபால் ரெட்டி அவர்கள் பதிலளிக்கையில் "1938-ம் ஆண்டு இந்திய சர்க்கார் சட்டம் அளித்தது இந்த விற்பனை வரியாகும். இது ராஜ்யங்களுக்கு நல்ல வருமானத்தை அளித்து வருகிறது.

ஆனால் இந்த சட்ட வரம்பை இந்திய சர்க்கார் அரசியலின் கீழ் நிர்ணயிக்கமுற்பட்டிருக்கின்றனர். இது துரதிருஷ்ட வசமானதே. ஏற்றுமதிப் பொருள்கள் மீது வரி விதிக்க ராஜ்யங்களுக்கு அதிகாரம் இருக்காது. இதனால் நமக்கு நஷ்ட மேற்படும்.

மேலும் அத்யாவசியப் பொருள்களான சிலவற்றைப்பார்லிமெண்ட் நிர்ணயித்துவிட்டால் அவற்றிற்கு ராஜ்ய சர்க்கார் வரி விதிக்க முடியாது. உணவுப்பொருள்கள், ஜவுளி முதலியவை இவற்றின் கீழ் வரலாம். இதனால் ஐந்தாறு கோடி நஷ்டமேற்படலாம். இதை சமாளிப்பதுகஷ்டம். ஆகவே இம்மாதிரி விஷயங்களில் ராஜ்ய சர்க்காரைக் கலக்காமலே பார்லிமெண்ட் நடக்க முற்படுவது நியாயமல்ல."

பெயரளவில்தான் ராஜ்யமே தவிர உண்மையில் மத்திய சர்க்காரின் கைப்பாவையாகத்தான் ஆக்கிவருகிறது. இந்திய சர்க்கார், ஆங்கிலேயர் வழங்கிய கொஞ்சநஞ்சம் அதிகாரங்களையும் பறித்துக் கொண்டுவருகிறது. மந்திமந்திரிகளோ கெஞ்சும் நிலையிலேயே உள்ளனர். ஆங்கில ஆட்சிக்குட்பட்டிருந்த பர்மாவிலே இந்திய சர்க்காரின் சட்டம் தலைகாட்டுமா? இலங்கையிலே நேருவின் வேண்டுகோளுக்கு மதிப்புத் தரப்படுகிறதா சுயாட்சிக்குப்பின். அவர்களைவிட நம்நாடு எதில் தாழ்வுற்றது. நம் மக்களின் குறைகள் உடனக்குடன் கவனித்து நிறைவேற்றப்பட வேண்டுமானால் திராவிடம் தனித்தே இயங்கவேண்டும். இல்லையேல் இழிநிலை ஏற்படுவதுடன் நம்மக்கள் நிரந்தர அடிமைகளாக ஆக்கப்படுவர் என்பதில் சிறிதும் தயக்கம் தேவையில்லை. இப்படிப்பட்ட வருங்கால நிலையறிந்து நலிவை நீக்க திராவிடர் இயக்கம் அரும்பாடுபட்டுஅன்பாக எடுத்துரைத்துக்கொண்டு வருகின்றது. மக்களும் இவைகளை உணர்ந்து மந்திரிகளுக்குச் சரியான பாடம் போதித்தால்தான் நாட்டின் நிலை நன்மையான வழியில் இருக்கும்.

---

### ஏற்றுமதி மூலம் இந்தியாவுக்கு ஸ்டர்லிங் வசதி

சமீபத்தில் ஏற்படப்போகும் ஒரு ஒப்பந்தத்தின் மூலம் ஜப்பான் 29,617,000 பவுன் மதிப்புள்ள ஜவுளியை ஸ்டர்லிங் பிரதேச நாடுகளினின்றும் இறக்குமதி செய்யும் என நியூயார்க் வியாபார சஞ்சிகை கூறுகிறது.

இதே ஒப்பந்தத்தின்படி இந்தியா 2,600,000 பவுன் மதிப்புள்ள கச்சாப் பருத்தியும் 142,000 பவுன் மதிப்புள்ள கயறும் ஏற்றுமதி செய்யும் என அச்சஞ்சிகை மேலும் தெரிவிக்கிறது.

---

### உர உபயோகம்

நியூஆர்லியன்ஸ்: அமெரிக்க விவசாயிகள் கடந்த ஜூன் 30, 1949-வது வருஷம் முடிய அவ்வருஷத்திற்கு 18,542,000 டன் உரங்களை உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். சராசரியாக 1935-முதல் 1939-ம் வருஷம் வரை உபயோகப்பட்டதை விட இது வருஷத்திற்கு 144 சத விகிதம் அதிகமாகும்.

மாலைமணி

சென்னை 20—12—50 புதன்கிழமை

# வளர்த்த கடா :: :: மார்பில் பாய்கிறது

## (1)

நம் நாட்டிலே, மக்கள் நிலை மிக மிகப் பிற்போக்கில் ஆழ்ந்து கிடக்கிறதென்றால், அதைவிடக் கேவலமான நிலையில் இருப்பது பெண் மக்கள் நிலையே. இங்கு, சிறப்பாகத் திராவிட நாட்டில், பழைய காலத்தில் பெண்கள் நிலை, ஆண்களுடன் சரிசமமாக யிருந்தது. நக்கீரர் என்றொரு புலவர் இருந்தால், ஔவை என்றொரு பெண் பலவர் பெருமை பெற்றிருந்தார், தொல்காப்பியர்என்றொரு பெரும் புலவர் விளங்கினார் என்றால் காக்கை பாடினியார்என்றொரு பெண் புலவர் பெருஞ் சிறப்படைந்திருந்தார். ஆண்கள் நாட்டிலே அரசியலில், கல்வியில், பிற துறைகளில் உயர்வடைந்திருந்தால் அத்துணையிலும் அக்காலத் திராவிடப் பெண்களும் கலந்து அறிவாற்றல மிகுந்தவர்களாயிருந்தனர்.

ஆனால், நம் நாட்டில் கி. பி. 9வது நூற்றாண்டுக்குப் பிறகு, புராண இதிகாசங்கள் இங்கு இறக்குமதி செய்யப்பட்ட பிறகு பெண் மக்கள் நிலை மிக மிகக் கேவலமாகிவிட்டது. பெண்கள் அடிமைகள், மாயப் பைசாசங்கள், வீட்டு நெறி பெறுவதற்குத்தடையாயுள்ள முட்டுக்கட்டைகள் என்றும். பெண் ள் படிப்பதற்கோ, உரிமைகள் பெறுவதற்கோ, தந்தை சொத்திலோ, கணவன் சொத்திலோ உரிமை பெறுவதற்கோ இடமில்லை என்றும்,பெண்கள் சிறு வயதில் பெற்றோருககும், பிறகுகணவருக்கும், அதன் பிறகு பிள்ளைகளுக்கும், அடிமைகளாயிருந்து வாழ வேண்டுமென்றும், பெண்கள் தனித்து எதனையும்சிந்தித்து முடிவு செய்யவோ கூடாதென்றும் விதிக்கப்பட்டு, அதே வாறு நடைமுறையில் கொண்டு வரப்பட்டன.

அன்னிய ஆட்சியின் பலனாகப் பெண்கள் கல்விபெற முடிந்ததென்றாலும் சமுதாயத்தில் அவர்களுக்கேற்பட்டிருந்த இன்னல்கள் நீக்கப்படவில்லை. பெண்கள் சமுதாயத்திற்கு இழைக்கப்பட்ட இந்தக் கொடுமைகளை ஒழிக்க வேண்டுமென்று, இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சில சீர்திருத்தக் கழகங்கள் வேலை செய்தனவெனினும், ஒன்றிரு பெண்கள் இதன் பயனாக முன்னேற்றம் பெற்றனர் எனினும், பொதுவாகப் பெண்கள் சமுதாயம் மேனிலை அடைய முடியவில்லை.

திராவிட இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட பின்னரே, பெண்கள் எல்லாத் துறையிலும் ஆண்களுடன் சமமானவர்களே என்னும் எண்ணம் மக்கள் மனத்தில் பதிந்தது. பெண்களுக்குச் சொத்துரிமை முதல் மற்றெல்லா உரிமைகளும் வழங்கப்பட வேண்டுமென்று விடாப் பிடியாகப் போராடியது திராவிட இயக்கமே என்பதை இவ்வியக்கத்தின் முதல் மாநாட்டிலிருந்து இன்றுவரையுள்ள மாநாட்டுத் தீர்மானங்கள், நடவடிக்கைகள்முதலியவற்றைக் கண்டால் புரிந்துவிடும். மாதர் மறுமண ஆதரவுச் சட்டம்குழந்தை மணத் தடைச் சட்டம, தேவதாசி ஒழிபபுச சட்டம, வி சாரத தடைச் சட்டம், பெண்கள் சொத்துரிமைச் சட்டம், குடும்ப விருத்திக் கட்டுப்பாட்டுக்கு அரசாங்க உதவி முதலியவற்றின் தோற்றம் திராவிட இயக்கத்தினர் செய்த கிளர்ச்சியின் பயனேயாகும்.

நிலைமை இங்ஙனமிருக்க, அண்மையில் திருச்செங்கோட்டில் கூடிய மாதர் மாநாட்டில் திராவிட இயக்கத் தொண்டை அடக்கக் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்வதாக ஒரு தீர்மானத்தை அமைச்சர் பக்தவச்சலனாரின் மகள் சரோஜினி வரதப்பன் கொண்டுவந்து நிறைவேற்றினாராம்.

இந்தப் பெண்மணி இதைத் தவிர வேறு என்ன செய்வார் பரிதாபம்! நூலைப் போலச் சேலை என்பது போலத் தந்தையைப்போல மகள், பெண்கள் சமுதாயத்தினை அடிமைப்படுத்திய கொடுமைகளிலிருந்து தப்ப, திராவிட மக்கள் தங்கள்மீது திணிக்கப்பட்டுள்ள ஆபாச அறியாமைகளைப் போக்கிக்கொள்ள, வட நாட்டுத் தொடர்பு கூடாதென்று கூறும் திராவிட இயக்கம் இந்த அம்மையாருக்குக் கசப்பாகத் தெரிகிறது போலும்! ஏன் கசப்பு? ஒருத்தி ஐவரை மணந்தாலும் பத்தினி என்பதைத் திராவிடம் இயககம் கண்டிக்கிறதே அதற்காகவா? பிள்ளை பெறுவதற்காகக் கணவனை மற்றவர்களுடன் சேர்ந்து பிள்ளை பெற்றுக் கொள்ளலாம் என்பதை ஒழுககக் கேடுமிகுந்த குற்றம் என்கிறதே திராவிட இயக்கம் அதற்காகவா?

கணவன் பெண்களைத் தட்டு முட்டுச் சாமான்களைப் போன்று விற்பது கொடிய ஆபாசச் செயல் என்கிறதே திராவிட இயக்கம் அதற்காகவா?

மனைவியைப் பந்தயப் பொருளாக வைத்துக் கணவன் சூதாடுவது அநாகரிக ஆபாசம் என்கிறதே திராவிட இயக்கம் அதற்காகவா?

இத்தகைய இன்னும் பல ஆபாச அழுக்குகள் நம்மவர் மீது மதத்தின் பேரால் திணிக்கப்பட்டு, கடவுள் பேரால் அவற்றை நம்மவர்கள் அனுசரிக்குமாறு செய்யப்பட்டிருப்பதைத் திராவிட இயக்கம் வன்மையாகக் கண்டித்து, இத்தகைய அழுக்குத் தத்துவங்கள் நிறைந்த வட நாட்டுத் தொடர்பு நமக்கு வேண்டாமென்கிறதே அதற்காகவா?

வேறு எதைக்கண்டு இந்த அம்மையார் திராவிட நாட்டுப் பிரிவினைக் கிளர்ச்சியை அடகக வேண்டுமென்று எண்ணிவிட்டார்களோ எமக்குத் தெரியவில்லை. உண்மையிலே நம் நாட்டுப் பெண்கள் ஆண்களின் கைக் கருவிகளாயிருக்கும் நிலை (திராவிட இயக்கம் தவிர) இன்னும் நீங்கவில்லை. எனவே இந்த அம்மையாரும் தம் தந்தையின் மனப் போக்கின் பிரதிநிதியாக மாதர் மாநாட்டில் தோன்றியிருப்பார் என்றே கருதுகிறோம்.

# உற்பத்தி ஸ்தலத்திலேயே ஸ்டாக் முடக்கப்படும்

—(0)—

## கலெக்டர்களுக்கு சர்க்கார் உத்திரவு

சென்னை, டிச. 20—

வெல்ல நெருக்கடி இன்னும் இருந்தே வருவதால் வெல்லம் உற்பத்தி செய்யப்பட்டவுடனேயே அவைகளை முடக்கிவிடும்படி கலெக்டர்களுக்கு சென்னை சர்க்கார் உத்திரவிட்டிருக்கின்றனர்.

அவை எப்படி விநியோகிக்கப் படவேண்டும் என்பது பற்றியும் இந்த உத்திரவில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

வெல்லம் உற்பத்தி செய் வர்கள் இனி லைசென்ஸ் பெறவேண்டியதில்லை என்று இந்திய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள்.

“இந்த ராஜ்யத்தில் வெல்லத்திற்கான நெருக்கடி இன்னும் இருந்துவருகிறது. இக்காரணங்களையெல்லாம் உத்தேசித்துதான் வெல்லத்தை உற்பத்தி இடத்திலேயே முடக்கவேண்டும் என சர்க்கார் உத்தரவிட்டிருக்கிறது.

### கலெக்டர்களுக்கு உத்திரவு

சென்னை ராஜ்ய மக்களுக்கு வெல்லம் கிடைக்கும்படி செய்வதற்காக பின்கண்ட உத்திரவை சென்னை சர்க்கார் எல்லா உபரி ஜில்லா கலெக்டர்களுக்கும்அனுப்பியிருக்கின்றனர்.

உபரி ஜில்லா கலெக்டர்கள், உற்பத்தியாளர் வெல்ல உற்பத்தியை செய்தவுடனேயே அந்த ஸ்டாககை முடக்கிவிடவேண்டும். இந்த ஸ்டாக்குகளை அந்தந்த ஜில்லாக்களில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் ஒப்படைக்கவேண்டும். கலெக்டர்கள் உத்திரவுப்படி வழக்கமாக விற்பனை செய்துவரும் சில்லரை வியாபாரிகளுக்கும்ரேஷன் கடைக்காரர்களுக்கும் இது கொடுக்கப்படவேண்டும். வழக்கமான வியாபாரிகளுக்கு இல்லை என்று சொல்லக்கூடாது.

### தேவை போக உபரி இருந்தால்...

ஸ்தல மக்களின் தேவை பூர்த்தி செய்யப்பட்ட பின் கூட்டுறவு சங்கங்களில் உபரிஸ்டாக் இருக்கிறதா என்பதை கலெக்டர்கள் அறிய வேண்டும். அப்படி உபரி இருந்தால் பற்றாக்குறை ஜில்லாக்களுக்கு அனுப்பலாம்.

விலை இம்பீரியல் மணங்கு ரூ 19 என்ற அடிப்படையில் முதல்தர இரண்டாம்தர வெல்லம் விற்கப்படும், ஒவ்வொரு கட்டத்திலும் விலை நிர்ணயிக்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

### பொங்கலுக்கு வெல்லம்

இந்த ஏற்பாட்டினால் பொங்கல் பண்டிகைக்கு வெல்லம் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## ஹிருதயநோய் குணப்படுத்த புது சாதனை

நியூயார்க், டிச. 20—

ஹிருதயத்திற்கு ரத்தத்தைக் கொண்டுவரும் ‘சூர்ட்ரீஸ்’ குழாய்கள் கெட்டு ரத்தம் ஓடுவது தடைபட்டு அதன் காரணமாக படுத்த படுக்கையாக இருப்பவர்களை எளிதில் குணப்படுத்தக்கூடிய புது ஹிருதய ஆப்ரேஷன் முறையை கிளீவேரிலர்து ஹிருதய நோய் சிகிச்சை நிபுணர் டாக்டர் கிளாடிக் பெக் கண்டு பிடித்திருக்கிறார்.

16 வருஷ ஆராய்ச்சியின் பலனாகவே இம்முறையை கண்டுபிடித்திருக்கிறாராம்.

கெட்டுப்போன ஆர்ட்வேயிலுள்ள ரத்தத்தை ‘வைன்ஸ்’ குழாய்வழியாக பரவும்படி செய்வதுதான். ஹருதய ஆப்ரேஷன் முதலில் இம்மாதிரி ஆப்ரேஷன் செய்வது சாத்ய மற்றது என்று கருதப்படலாம்.

டாக்டர் கிளாடிக் பெக் சுமார் 100 நாய்களுக்கு இந்த ஆப்ரேஷனை செய்து வெற்றிகண்ட பின்னர் தான் மனிதர்களும் இதை செய்ய ஆரம்பித்திருக்கிறார்.

# தி.மு.க. பொதுக்கூட்டங்கள்

——— ———:0:——— ———

## மானாமதுரை

16-12-50 மாலை 7-30 மணிக்கு மதுரை எஸ். முத்து தலைமையில் ஆரம்பமாகியது. தோழர்கள் எம். எஸ். இராமசாமி, சத்தியேந்திரன், இரா. நெடுஞ்செழியன் அவர்கள் இனிய முறையிலே, கருத்துக்கள் பல அள்ளி வீசி ஆர்வத்தை அளிக்கும் முறையிலே அவர்கள் சொற்பொழிவு இருந்தது. என்றும் காணா மக்கள் கூட்டம் மனதிற்கு மகிழ்ச்சியை உண்டுபண்ணியது.

## கல்லிடைக்குறிச்சி

11-12-50 திங்களன்று தி. மு. க. ஆண்டு விழாக் கொண்டாடப்பட்டது. அன்று நடந்த பொதுக் கூட்டத்தில் டாக்டர் சுப்பிரமணியம் தலைமை வகித்தார். தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்கள் முதலில் பேசினார்கள். பின்பு தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர்கள் 2 மணி நேரம் கழகக் கொள்கைகளை விளக்கியும் சர்க்காரின் தவறான போக்கைக் கண்டித்தும் விளக்கமாகப் பேசினார்கள். செயலாளர் நன்றிகூறலுடன் கூட்டம் 10 மணிக்கு இனிது முடிந்தது.

## திருச்சி

17-12-50ல் திருச்சி பெரியகடை வீதியில் திராவிட முன்னேற்றக் கழக ஆண்டு விழா ஜி. பராங்குசம் தலைமையில் நடந்தது. தலைமை உரையில் 'அரசியலார் போக்கும் நமது பொறுப்பும்' என்பது பற்றி பேசினார்கள். கவிஞர் கண்ணதாசன் 'அரசியல் பித்தலாட்டங்களைக் குறித்தும், நெடுமாறன் 'நம்நிலை' என்பதைப்பற்றியும், நாகர்கோவில் கே. மதியழகன் தொழிலாளர்கள் படும் அவதிகுறித்துப் பேசினார். பிறகு காரணமங்கலத்தில் சர்க்கார் அத்துமீறி நடந்துகொண்டதைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேறியதும் கூட்டம் இனிது முடிந்தது.

## கடம்பூர்

17—12—50ல் தி. மு. பேச்சு மன்ற பொதுக் கூட்டம் எம். எல். பி. சாமி அவர்கள் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

சு. மாரியப்பன் தற்காலநிலைபற்றி மிகத் தெளிவாகவும், விரிவாகவும் பேசினார்கள்.

பிறகு, அறிஞர் அண்ணா, இரா. நெடுஞ்செழியன். ஈ. வே. கே. சம்பத் ஆகியோர்களைத் தருவித்து 23-7-50ல் குறித்த நிகழ்ச்சி நிரலில் கண்டபடி நெல்லை மாவட்ட எற்றுப் பிரயாணத்தைவரும் ஜனவரித் திங்களில் நடத்தித் தருமாறு கூட்டம் மாவட்ட செயலாளரைக்கேட்டுக் கொள்ளும் தீர்மானத்துடன் இனிது முடிவுற்றது.

## தேவக்கோட்டை

15—12—50 வெள்ளிக்கிழமை மாபெரும் பொதுக் கூட்டம். திருவண்ணாமலை நகரசபைத்தலைவர் தோழர். ப. உ. சண்முகம் அவர்கள் தலைமையுரையில் திராவிடநாடு பிரியவேண்டிய அவசியம் பற்றி பேசியபின் கவிஞர் கண்ணதாசன் 20 கோடிமக்கள் வாழும் இந்த நாட்டில் முப்பத்து முக்கோடி தேவர்கள்உலாவுகிறார்கள் என்றும், அடுத்துப் பேசிய தோழர் நெடுஞ்செழியன் எம். ஏ அவர்கள் வல்லபாய் பட்டேல் இயற்கை எழுதியது குறித்து அனுதாபம் தெரிவிக்கும் முறையில் கொள்கையில் நமக்கும் அவருக்கும் வேறுபாடு இருந்தபோதிலும் மானிடவர்களாய் பிறந்தவர்களில் பெரும்பாலோர் சோத்தலாடித்த பிண்டங்களாய் வாழுகிறார்களே ஒழிய விடுதலை வீரர்களாய் வாழுகிறவர் ஒரு சிலரே. இந்த முறையில் நாம் அவர் இயற்கை எய்தியது குறித்து அவரை பிரிந்து நிற்கும் மந்திரி சபைக்கும், குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் நம் அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வோம் என்றாலும், வடநாடு, தென்னாடு உடை, உணவு, மொழி, கலாச்சாரம் அனைத்திலும் மாறுபாடு உள்ள தென்பதையும் வடநாட்டுச் சுரண்டல் ஆரியர்களின் ஆதிக்கம் அரசாங்கத்தாரின் அடக்குமுறை தற்போதைய உணவுநிலைகுறித்தும். அது பற்றி அரசாங்கத்தார் வாளா இருப்பது குறித்தும் சுமார் 2-30 மணி நேரம் பேசிய பின்னர் செயலாளர் நன்றி கூறக்கூட்டம் இனிது கலைந்தது.

## உசிலம்பட்டி

தி.மு. கழகத்தின் சார்பாக 1வது வார்டு மாமரத்துப்பட்டியில் தோழர் கே. என். பேயத்தேவர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. அதுபோது மத்திய பிரசாரக் குழு உறுப்பினர் தோழர் எம், அய்யாச்சாமி அவர்கள் திராவிடநாடு பிரிக்கவேண்டியதின் அவசியம் பற்றி விரிவாகப் பேசினார் செயலாளர் நன்றி கூற கூட்டம் இனிது கலைந்தது.

---

# பாரதி தமிழ்ச் சங்கம்

## பாரதி மாநாடு

### கல்கத்தாவில் 22, 23, 24 தேதிகளில் நடைபெறும்.

கல்கத்தா, டிச. 19—

இவ்வாண்டு டிசம்பர் மாதம் 22, 23, 24, 25, 26 தேதிகளில் கவி. சுப்பரமணியபாரதியார் பிறந்ததின விழாவும், பாரதி மாநாடும் தேசிய உயர்நிலைப்பள்ளியில் நடைபெறும். மாநாட்டை மேற்கு வங்க கவர்னர் கைலாசநாத கட்ஜு திறந்துவைப்பார். டாக்டர். டி. எம். பி. மகாதேவன் திறந்துவைப்பார். என செயலாளர் ப. ந. தியாகராசன் அறிவிக்கிறார்,

---

## தண்ணீரில் வேலை செய்யும் காமிரா

லாஸ்ஏஞ்சலஸ்: எங்கும் சுலபமாக எடுத்துச் செல்லக்கூடியதும் தண்ணீருக்கடியில் சலனப் படங்களை எடுக்கக் கூடியதுமான ஒரு காமிராவை அமெரிக்கக் கடற்படையினர் கண்டுபிடித்திருக்கின்றனர். இதன் மூலம் நீருக்கடியில் 200 அடிக்கும் கீழ் எவ்வித ஆதாரம், பிடிப்பு முதலியன இன்றி படங்கள் எடுக்கமுடியும்.

# கோயங்கா மன்னிப்பு கேட்கிறார்

——(o)——

## உணர்ச்சி வேகத்தில் கூறிவிட்டாராம்

புதுடில்லி, டிச. 18—

டில்லி சட்டசபையில் காப்புவரி போர்டு மசோதா மீது விவாதம் நடந்தது. அச்சமயம் வர்த்தக மந்திரியைப் பற்றி கூறிய சில தவறான வார்த்தைகளுக்கு சென்னை மெம்பரும், "தினமணி"—"இண்டியன்எக்ஸ்பிரஸ்" சொந்தக்காரரான தோழர் கோயங்கா மன்னிப்பு கேட்டுக் கொண்டார். உணர்ச்சி வேகத்தில்தாம் அப்படிக்கூறிவிட்டதாகத் தெரிவித்துக்கொண்டார். மேலும் அவர் கூறியதாவது:—மந்திரியைப் பற்றி தாம் கூறிய அந்த வருந்தத்தக்க சம்பவத்தைப் பற்றி வர்த்தக மந்திரி மிகவும் பொறுமையுடன் குறிப்பிட்டதான 'அவர் மிகவும் உயர்ந்தவர்' என்று குறிக்க அதுவே போதுமானது என்றும் அவர் மிகவும் நல்லவர் என்பதை எடுத்துக்காட்ட தான் பல விஷயங்களை உதாரணமாகக் கூற முடியும் என்றும், ஏதோ அவசரத்தில் உணர்ச்சி வேகத்தால் அவ்வாறு கூறியதற்கு தான் வருந்துவதாகவும் தோழர் கோயங்கா கூறினார்.

---

## சமூக உரிமை நீதி மாநாடு

பெரியகுளத்தில் 27—12—50-ல் சமூக உரிமை நீதி மாநாடு நடைபெறும்.

மாநாட்டிற்குப் பல்கலைச் செல்வர் வளையாபதி அடிகள் எம். ஏ. தலைமை தாங்குவார். சினிமாப் புகழ் கே. ஆர். இராமசாமி, மாநாட்டைத் திறந்து வைப்பார். மற்றும், அறிஞர் சி. என். அண்ணாதுரை எம். ஏ., 'காதல்' ஆசிரியர் இராமநாதன்; 'திராவிடன்' ஆசிரியர் என். வி. நடராசன், கன்னியப்பன் எம். எல். ஏ., 'வேலைக்காரி' புகழ் டைரக்டர் ஏ. எஸ், ஏ. சாமி, புலவர் திருமாரன், ஈ. வி. கே. சம்பத், கவிஞர் கண்ணதாசன், இரா. நெடுஞ்செழியன், வைசு. மஞ்சுளாபாய் ஆகியோர் சொற்பொழிவாற்றுவார்கள்.

மாநாடு பெரியகுளம் வடகரை அனுமார் கோயிலை அடுத்து அலங்கரிக்கப்பட்டிருக்கும் திருவள்ளுவர் பந்தலில் நடைபெறும்

---

## காஞ்சி மாநாடு

காஞ்சிபுரத்தில் இம்மாதம் 23, 24-ந்தேதிகளில் நடைபெறும் தி. மு. க. மாநாட்டு டிக்கட்டுகள் சென்னை 202 தங்கசாலை வீதி கழக அலுவலகத்தில் 23-ந்தேதி வரை கிடைக்கும் என்று மாநாட்டு செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

காஞ்சி மாநாடு டிக்கட்டுகள் ஆர்க்காடு பஸ் நிலையத்தின் எதிரில் த. பொன்னம்பலம் அவர்களிடம் கிடைக்கும்.

---

## 3-வது முனிசபல் தொழிலாளர் மாநாடு

சிரீரங்கம், டிச. 19—

3-வது முனிசபல் தொழிலாளர் மாநாட்டின் வரவேற்புக் கமிட்டி கூட்டம் 14—12—50ல் கூடி, மாநாட்டை வரும் ஜனவரி 27,28ம் நாளில் நடத்துவதென் முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டிற்கு தலைவராகசோஷியலிஷ்ட் கட்சி காரியதரிசி தோழர் திருதில்சௌதிரி எம். ஏ. அவர்களையும், மாநாட்டின்திறப்பாளராக எஸ். குருசாமி 'விடுதலை' ஆசிரியர் அவர்களையும் கொடி யேற்றுபவராக ஆர். ராமநாதன் அவர்களை அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.

---

## அறப்போர்

திருப்பத்தூரில் 17-12-50-ல் நடப்பதாக இருந்தது தடுக்க முடியாத சில காரணங்களால் 24-12-50 ஒத்திவைக்கப் பட்டுள்ளது.

---

## மதநிலையங்கள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முழுவதும் அரசாங்கத்தைச் சேர்ந்ததாகும்.

இவ்வாறு அரசாங்கம் ஆட்களை நியமிக்கும்போது, தங்களுக்கு வேண்டியவர்களாகவும், தேர்தலில் தங்கள்கட்சிக்கு, தங்களுக்கு வேலை செய்யும் ஊழியர்களாகவும்பார்த்து நியமனம் செய்துவிடுவார்கள் என்ற பீதி பொது மக்கள் உள்ளத்தில் எழாமலிருக்கும் வகையில் அரசாங்கம் நடந்துகொள்ள வேண்டும். முன்னரே பலவிதமான ஊழல்கள் செய்திருப்பதாகப் பிரகாசத்தினால் குற்றம் சுமத்தப்பட்ட அவை பற்றி அமைச்சர்கள் அளித்திருக்கும் பதில்கள் மக்கள் மனத்தில் தக்க சமாதானம் உண்டாகாமலிருக்க, அமைச்சர்கள் இத்தகைய சந்தர்ப்பத்தில் ராஜிநாமா செய்து, தேர்தலுக்கு நின்று மீண்டும் பொதுமக்களுடைய நம்பிக்கையுடன் பதவியில் அமர வேண்டியிருக்க அதையும் செய்யாமல், பேசாமல் பதவியிருந்தால் போதுமென்று எண்ணிப்பதவியை இறுகப் பற்றிக்கொண்டிருப்பதும், மக்கள் மனத்தில் காங்கிரஸ் கட்சியைப் பற்றிய தவறான கருத்து பரவியிருக்கையில், மதநிலையங்களில் நியமிக்கும் ஆட்கள் விஷயத்தில் அரசாங்கம் நேர்மையான வழியில் நடந்து கொள்ள வேண்டுமென்று நாடு விழைகின்றது. உற்றார், உறவினர், சனுனை, போன்றவைகளும்பிறபிறவைகளும் இதில் தலையிடாதிருக்க வேண்டும் என்று நாடு விரும்புகிறது.

செங்கற்பட்டு மாவட்ட

# தி. மு. கழக முதல் மாநாடு

காஞ்சீபுரம்

(இடம் :—பெரியகாஞ்சீபுரம் தர்கா மைதானம்)

டிசம்பர் 23, 24 சனி, ஞாயிறுகளில்

மு. அரங்கசாமி பந்தலில் நடைபெறும்.

தலைவர் :

**தோழர் சி. பி. சிற்றரசு**

துவக்குபவர் :

**தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி**

மாநாட்டில் கழகப் பொதுச்செயலாளர்

**அண்ணாதுரை கலந்துகொள்வார்**

மாநாட்டில் கலந்துகொள்ளும் கழக முன்னணி வீரர்கள்:

இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, E. V. K. சம்பத், கா. அப்பாதுரை, பூ. கணேசன், A. சித்தையன், காஞ்சி-கலியாணசுந்தரம், N. S. இளங்கோ, இரா. இளம்வழுதி, கவிஞர் கண்ணதாசன், A. K. வேலன், K. K. நீலமேகம், N. ஜீவரத்தினம், இராமாமிர்த அம்மையார், சத்தியவாணிமுத்து, அலமேலு அப்பாதுரை, N. V. நடராசன், 'திராவிடன்' ஆசிரியர், காஞ்சி-மணிமொழியார், 'போர்வாள்' ஆசிரியர், முருகு சுப்பிரமணியம், 'பொன்னி' ஆசிரியர், ப. கண்ணன், 'பகுத்தறிவு' ஆசிரியர், E. V. A. வள்ளிமுத்து, கோவில்பட்டி நகரசபைத் தலைவர், ப. உ. சண்முகம், திருவண்ணாமலை நகரமன்றத் தலைவர், K. சுப்பிரமணியம், போளூர், K. கோவிந்தசாமி, G. பராங்குசம், புலவர் கோவிந்தன், S. R. சுப்பிரமணியம், K. A. மதியழகன், இராம. அரங்கண்ணல், தில்லைவில்லாளன், ஈழத்துஅடிகள், டி. எம். பார்த்தசாரதி.

நிகழ்ச்சிகள்

**23—12—50 சனிக்கிழமை**

காலை 10 மணிக்கு கொடியேற்று விழா, காலை 10-30 மணிக்கு வரவேற்புரை, (சி. வி. எம். அண்ணாமலை) காலை 11-30 மணிக்கு துவக்கவுரை, (ஏ. வி. பி. ஆசைத்தம்பி)

இடைவேளை

மாலை 3 மணிக்கு தலைவர் தேர்தல், மாலை 3-30 மணிக்கு தலைவர் முன்னுரை, (சி. பி. சிற்றரசு) மாலை 5 மணிக்கு இசை நிகழ்ச்சிகள், இரவு 10 மணிக்கு நாடகம்.

**24—12-50 ஞாயிற்றுக்கிழமை**

காலை 9 மணி முதல் நண்பகல் 1 மணி வரை கழக முன்னணி வீரர்கள் சொற்பொழிவு.

இடைவேளை

மாலை 3 மணிக்கு தீர்மானங்கள், மாலை 5 மணிக்கு பொதுச் செயலாளர் அண்ணாதுரை சொற்பொழிவு, மாலை 6-30 மணிக்கு தலைவர் முடிவுரை, (சி. பி. சிற்றரசு) இரவு 10 மணிக்கு நாடகம்.

மாநாட்டில் கலந்துகொள்ளும் இசைவாணர்கள்:

திருச்சி M. M. மாரியப்பா, திருவாரூர் T. V. நமசிவாயம், நாகூர் அனீபா, சென்னை K. R. செல்லமுத்து, காஞ்சி K. புண்ணியகோட்டி.

நடிப்புப்புலவர் K. R. ராமசாமி, பொதுச்செயலாளர் அண்ணாதுரை பங்கேற்று நடிக்கும் நாடகங்கள்

"சந்திரமோகன்" சனி இரவு

"நீதிதேவன்மயக்கம்" ஞாயிறு இரவு

செயலாளர்கள் : சே. கோ. பெருமாள், D. சபாபதி.

வரவேற்புக் குழுத்தலைவர் : C. V. M. அண்ணாமலை.

தொண்டர்படை தலைவர்கள் : C. பஞ்சாட்சரம், K. T. S. மணி.

விளம்பர உறுப்பினர்கள் : R. K. மூர்த்தி, E. எத்துராசு.

மாநாட்டு கட்டணம் இருநாட்களுக்கும் :—

வரவேற்பாளர் ரூ. 5 பிரதிநிதி ரூ. 2 பார்வையாளர் ரூ. 1 பெண்களுக்கு அ. 8

நாடகத்துக்கு தனிக்கட்டணம் கிடையாது.

மின்சார விளக்கமைப்பு : சென்னை P. மோகம்பரம் & P. ராமசந்திரன்


## ...றுவனின் ஜீவகாருண்யம்

ஒரு 15 வயது பையன் லண்டன் ...பிர்காட்சிசாலையில் தினமும் இர... புகுந்து 202 பவுன் மதிப்புள்ள ...சிகளை வெளியே பறந்து செல் ...படி செய்திருக்கிறான். இவைக... சில அச்சிறுவனால் ஸெயிண்ட் ...ம்ஸ் பார்க்கிற்கு கொண்டு ...கப்பட்டிருக்கின்றன.

---

## ...ரிட்டன் செயற்கை ரப்பர்

லண்டன்; டிச. 20—

...தன் தேவைகளை பூர்த்திசெய்து ...கொள்ள செயற்கை ரப்பர் உற்பத்தி ...தொழிற்சாலை ஒன்றை பிரிட்டன் ...சீக்கிரமே ஏற்படுத்தும் எனத் தெரி...கிறது.

1921ம் வருஷத்தில் பிரிட்டன் 18000 டன் ரப்பரைத்தான் உபயோகித்து வந்தது; ஆனால் இன்...றயத் தேவை 215000 டன்.

## கோவை மாவட்ட சுற்றுப்பிரயாணம் ஒத்திவைப்பு

தோழர் ஈ. வே. கி. சம்பத் கோபி, ஜி. என். ராஜு, எஸ். ஆர். சந்தானம் ஆகியோர்மாவட்டத்தில் இம்மாதம் சுற்றுப் பயணம் செய்வதாக விருந்தது. ஆனால் காஞ்சி, நாஞ்சில் நாட்டு மாநாடுகள் இருப்பதால் ஜனவரி மாதம் 22-தேதி சுற்றுப்பயணம் செய்ய முடிவு செய்திருக்கிறோம். கடிதம் எழுதுபவர் என். ஈ. பாலகுரு, அமைப்பாளர் தி. மு. கழகம், ஈரோடு என்ற முகவரிக்கு எழுதவும்,

---

நியூயார்க், டிச. 20—

கொரியாவில் கிடைத்த படிப்பினைகளிலிருந்து யுனைடெட் ஸ்டேட்ஸ் தன் விமானப் படை இன்னும் திறமையாக சீர்திருத்தி அமைக்கப்பட்டு வருகிறதென்று கூறப்படுகிறது.

## கழகத் தோழர்களுக்கு

நாகர் கோவில், டிச. 19—

இதுவரை தி. முன்னேற்றக் கழக மாநாட்டுத் தொண்டர் படையில் பெயர் கொடுத்துப் பதிவு செய்தோரும், செய்ய ஆவலுள்ளோரும் வருகிற வெள்ளியன்று (22-12-50) காலை 9-மணிக்கு மாநாட்டுப் பந்தலில் வந்து சேருமாறு வேண்டிக் கொள்கிறேன். தொண்டர்கள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள் பற்றி பயிற்சியளிக்கப்படும். தவறாது கலந்து கொள்ளும்படி தொண்டர் படைத் தளபதி எம். அந்தோணி எழுதுகிறார்.

---

## பிறப்பு

கல்லுப்பட்டி, டிச. 16—

16-12-50 காலை 6 மணிக்கு பூ. பெ. நடராசன், துணைவியார், சின்னுதாயம்மைக்கு ஆண்குழந்தை பிறந்து தாயும் சேயும் நலம்.


தமிழர் திருநாளன்று வெளிவருகிறது

"முன்னேற்றமுரசு"

(வார வெளியீடு)

ஆசிரியர்: பி. ராமசாமி

புரட்சிநடை-புதுமை கருத்துக்கள்-வீணாவிலா நொருக்கும் சாட்டையடி தி.மு.க. லட்சிய ஏடு.

எல்லா ஊர்களிலும் முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

விவரங்களுக்கு : நிர்வாகி

"முன்னேற்றமுரசு"

81, கொல்லவார் அக்ரகாரம் ரோடு

சென்னை-21


Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty street, Madras-I